குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

புனல்குளம், புதுக்கோட்டை,

தமிழ்த்துறை

தலைப்பு: சங்க இலக்கியத்தில் தலைவி

பாடக்குறியீட்டு எண் :16LCT4(பண்டைய இலக்கியம்)

ஆசிரியர்

முனைவர் ரெ.வனிதா

Scanned with CamScanner

## ஆற்றுப்படை இலக்கணம்

'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற எண்ணமே ஆற்றுப்படை எழக் காரணமாகும். ஆற்றுப்படை பொருண்மை அடிப்படையில் அமையும் இலக்கிய வகையாகும். இது ஆற்றுப்படுத்துதல், நெறிப்படுத்துதல் என்ற பொருண்மையை உடையது. பரிசில் பெற்ற ஒரு கலைஞன் பரிசில் பெற விழையும் மற்றொரு கலைஞனை வள்ளலிடம் ஆற்றுப்படுத்துதல் எனப் பொதுவாகக் கூறலாம். தொல்காப்பியமும் பாட்டியல் நூல்களும் ஆற்றுப்படை இலக்கணத்தைக் கூறுகின்றன. அந்நூல்கள் கூறும் இலக்கணம் மக்கள் வாழ்வுநிலை, சமயநிலை, மாந்தர் மனநிலை, சமூகச் சூழல், காலம் போன்றவற்றிற்கு ஏற்ப சிற்சில வேறுபாடுகளுடன் உள்ளன.

ஆற்றுப்படையைத் தொல்காப்பியர் துறைகளில் சுட்டிச் செல்வார். பின் வந்த புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரும் தொல்காப்பியர் நெறி பற்றியே ஆற்றுப்படையைப் பாடாண் படலத்தில் ஒரு துறையாகவே விளக்கிக் காட்டுவார். இலக்கிய வகைகளை இனம் கண்டு அவற்றின் இலக்கணம் உரைக்க எழுந்த பாட்டியல் நூல்கள் ஆற்றுப்படையைத் துறையளவிலேயே நிறுத்தாது ஓர் இலக்கிய வகையின் பாடுபொருண்மையாகச் சுட்டியுரைத்துள்ளன.

"புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கானத்திடை
வறுமையுடன் வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கண்டப்
புரவலன் நாடூர் பெயர் கொடை பராஅய்
ஆங்கு நீ செல்கென விடுப்பதாற்றுப்படை."

(பபா. 202)

என்பது பன்னிரு பாட்டியல் கூறும் ஆற்றுப்படைக்கான இலக்கணமாகும்.

Scanned with CamScanner

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"

(தொல். பொருள். புறத்திணையியல்)

என்று தொல்காப்பியர் புறத்திணையியலில் ஆற்றுப்படை பற்றிக் குறிப்பிடுகிறார்.

கூத்தராயினும், பாணராயினும், பொருநராயினும், விறலியராயினும் நெறியிடைக் காட்சிக் கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளம் நுமக்கும் பெறலாகும் எனவும் சொன்ன பக்கமும் என்னும் நூற்பாவில் உள்ள பக்கம் என்ற சொல்லிற்கு ஆற்றினது அருமையும் அவன் ஊரின் பண்பும் கூறப்படும் என்று விளக்கம் கூறுகிறார். இளம்பூரணர் மேலும் எச்சவியலில் ஆற்றுப்படை என்ற பெயர் சுட்டிச் சிறப்பிலக்கணம் கூறியுள்ளார்.

"முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே
ஆற்றுப்படை மருங்கில் போற்றல் வேண்டும்"

(தொல். 945)

என்ற நூற்பாவில் முன்னிலை சுட்டிய ஒருமைச்சொல் பன்மையொடு முடியினும் ஆற்றுப்படையில் ஏற்றுக்கொள்ளலாம் என்கிறார். இந்நூற்பாவில் ஆற்றுப்படை என்ற இலக்கிய வகையைப் பெயர் சுட்டிக் கூறியுள்ளார். உலா, பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கிய வகைகளைக் கூறும்போது அவற்றைப் பெயர் சுட்டாது கூறியுள்ளார். இதனால் ஆற்றுப்படை அவர் காலத்தில் தனியொரு இலக்கிய வகையாகத் திகழ்ந்ததை அறியலாம்.[8]

Scanned with CamScanner

**பாடல் பெற்ற அரசன்**

சோழன் கரிகால் பெருவளத்தான் இவன் பொருநர் ஆற்றுப்படைக்கும் பட்டினப்பாலைக்கும் தலைவன். சோழன் உருவப் பல்தேர்இளஞ்சேட்சென்னியின் புதல்வன் இளமையில் நெருப்பால் சுடப்பட்டு கால் கரியாயிற்று என்பதால் கரிகாலன் என்ற பெயரைப் பெற்றதாகவும் சொல்வர்.

பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் கொடுத்தான் எனக் கலிங்கத்துப்பரணி கூறுகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து அரசாட்சி செய்தான் என்பது பட்டினப்பாலை கூறும் செய்தி. இவனைப் பாடிய புலவர்கள் கருங்குழலாதனார், வெண்ணிக்குயத்தியார் போன்றோர்.

**"ஆறலை கள்வர் படைவிட அருளின்**
**மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"**

என்று யாழ் இசைக்கருவியை நேரே காட்டுவது போல் அழகாக வருணிக்கிறார்.[30]

**சிறுபாணாற்றுப்படை**

சிறுபாணாற்றுப்படை சங்க காலத்தில் தோன்றிய நூலாகும். இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் இந்நூலை இயற்றினார். தொண்டை மண்டலத்தில் சென்னைக்குத் தென்மேற்கிலுள்ள உப்பங்கழிகளுக்கு இடையே இருத்தலால் பெயர் இடைக்கழி நாட்டின் நல்லூரில் வாழ்ந்தவர். தத்தனார் என்ற இயற்பெயருடையவர். கல்வி மேம்பாடு காரணமாக நத்தத்தனார் என்று பிற்காலத்தில்

Scanned with CamScanner

அழைக்கப்பட்டவர். ஐந்திணைகளைச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவர். பண்களைப் பற்றிய நுண்ணறிவு உடையவர். இவரால் பாடப்பட்ட ஓய்மா நல்லியக்கோடனின் நல்ல பண்புகளையும், வீரச்செயல்களையும் வள்ளல் தன்மையையும், பாணனை அவன் விருந்தோம்பும் முறையையும் அழகுற எடுத்துக்காட்டுகிறார். பழம்பெரும் நகரங்களான வஞ்சி, கொற்கை, மதுரை, உறந்தை என்ற நகரங்களின் சிறப்புக்களையும் பாரி, ஓரி, காரி, ஆய், பேகன், அதியமான், நள்ளி முதலிய கடையெழு வள்ளல்களின் அருஞ்செயல்களையும் இந்நூலின் வாயிலாக அறியமுடிகிறது.

இந்நூல் பரிசில் பெற்ற சிறுபாணன் பரிசில் பெற விழையும் மற்றொரு சிறுபாணனை ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் பாடல் ஆற்றுப்படுத்துவதாகப் பாடுவதால் இப்பெயர் பெற்றது. ஆசிரியப்பாவால் இயற்றப்பட்ட 269 அடிகளையுடையது. நல்லியக்கோடனின் வாயில் இரவலருக்கு அடையாவாயில் எனப் பாராட்டுகின்றார். மேலும் நெய்தல், முல்லை, மருதநில இயல்புகளையும் யாழின் வருணனையையும், பாணனின் ஏழ்மை நிலையையும், நல்லியக்கோடனின் வீரம், கொடை போன்றவற்றையும் பாடுகிறது.

பழங்காலத்தில் பழுத்த மரம் தேடிச் செல்லும் பறவைகள் போலப் பரிசில் பெறுவோர், பரிசில் கொடுப்போரை நாடி தேடிச் சென்றனர். ஏற்கனவே பரிசில் பெற்று வருகின்ற கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோர் பரிசில் பெறச் செல்லுகின்ற கூத்தர், பாணர்,பொருநர், விறலி ஆகியோரை வரும் வழியில் பார்த்து தாங்கள் பெற்று வந்த மிகுதியான செல்வதைப் பெறச் செல்கின்றவர்களுக்குக் கூறி, வழிகளைச் சொல்லி அவர்களைப் பயன்பெறச் செய்தல் என்பது ஆற்றுப்படை இலக்கணம்.

"இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ"[35]

என்ற அடி. இனிய குரலையுடைய சிறிய யாழை தம் இடப்பக்கத்து அணைத்துத் தழுவிக் கொண்டு செல்வதைக் கூறும். இதனால் இவர் சிறுபாணர் எனப் பெற்றனர். சிறிய யாழை உடையோர் என்பது பொருள்.

Scanned with CamScanner

யாழ்நான்கு வகைப்படும். பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ்.

பேரியாழ்- இருபத்தோரு நரம்புகளையுடையது

மகரயாழ்- பத்தொன்பது நரம்புகளையுடையது

சகோடயாழ்- பதினான்கு நரம்புகளையுடையது.

செங்கோட்டுயாழ்- ஏழு நரம்புகளையுடையது

இதில் செங்கோட்டு யாழைச் சிறிய யாழ் என்றும்கூறுவர் போலும்.

பாணர் மூவகைப்படுவர். இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர், எனப் பாணர் பொதுநிலையில் பண் இசைத்துப் பாடுவோரைக் குறிக்கும். இங்கே கூறப்பெறுகின்ற பாணன் யாழ்ப்பாணன் சிறிய யாழை உடைய பாணன். பாடிய புலவர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்.

சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் இப்புலவர் இச்சிறுபாண் ஆற்றுப்படை என்ற ஒரு பாடலை மட்டும் பாடியுள்ளார்.

இவர் சோழநாட்டின் தலைநகரமாகிய உறந்தை, பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை, சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சி ஆகிய மூன்று நகரங்களுக்கும் சென்று வந்துள்ளார் என்பதை அவர் பாடல்வழி அறிகிறோம். மூவேந்தர்களையும், கடையெழு வள்ளல்களின் சிறப்புக்களையும் இவர் பாடியுள்ளதால் அவர்கள் காலத்திற்குப் பிற்பட்டவர் என்று தெரிகிறது.

திருவள்ளுவமாலையில் ஆயிரத்து முந்நூற்று முப்பது என்னும் வெண்பாவைப் பாடிய நத்தத்தனாரும், நத்தத்தம் என்னும் இலக்கண நூலை இயற்றிய நத்தத்தனாரும் இவரினின்றும் வேறுபட்டவர் என்று தோன்றுகின்றது.

மிகச்சிறந்த கவிஞர், விறலியின் வருணனை அந்தாதி நிலையில் அமைந்துள்ளது. இயற்கை வருணனை மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

Scanned with CamScanner

தாழை, அன்னத்தைப் பூக்கின்றது. செம்பருத்திச் செடி, பொன்னை மருட்டுகின்றது. கடல் முள்ளி, நீலமணியை அவிழ்க்கிறது. புன்னை மரம் முத்துக்களைத் தோற்றுவிக்கிறது. அவரைக்கொடி பவழத்தைக் கோக்கிறது. காயா மயிலை அவிழ்க்கிறது. முசுண்டைக் கொடி பனைக்குடையைத் தருகிறது. காந்தள் விரல்களாகப் பூக்கிறது. இவ்வாறு நான்கு நில வருணனை புதுமையாக அமைந்துள்ளது. பாடலில் வரலாற்றுச் செய்திகள் மிகுதியாக உள்ளன. இதை வரலாற்றுச் சமுதாயப் பாட்டு என்று கூறலாம் என்பார் தமிழண்ணல்.

பாடப்பெற்ற தலைவன் ஓய்மானாட்டு நல்லியக்கோடன். இவன் ஓய்மான் நல்லிக்கோடன் எனவும் அழைக்கப் பெற்றான். இவனைப் பாடிய புலவர் நல்லூர் நத்தத்தனாரும் நன்னாகனாரும் ஆவர். இவனுடைய பரம்பரையினராக ஓய்மான் நல்லியாதன், ஓய்மான் வில்லியாதன் என இருவர் குறிக்கப்பெறுகின்றனர்.

ஓய்மான் நாடு என்பது திண்டிவனத்திற்கு வடக்கிலுள்ள மாவிலங்கையை வட எல்லையாகவும் சூணாம்பேடு என்னும் ஊரை அடுத்த வில்லிபாக்கத்தைக் கிழக்கு எல்லையாகவும் கொண்டது . அந்நாடு மேற்கில் ஏறத்தாழ விழுப்புரம் வரையில் பரவியிருந்தது என்பது இதுவரையில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களால் அறியப்படும் உண்மையாகும் என்று எழுதுகிறார் மா. இராசமாணிக்கனார்.

இப்பகுதிக்குள் எயிற்பட்டினம், வேலூர், ஆமூர், கிடங்கில் ஆகிய ஊர்கள் இருந்தன. கிடங்கில் இன்றுள்ள திண்டிவனம் என்பது ஆய்வாளர் கருத்து. கடையெழு வள்ளல்கள் மாய்ந்த பின்பு இவன் வந்ததாகக் குறிப்பிடப்பெறுகிறான். இவன் உறுபுலித்துப்பின் ஓவியர் பெருமகன் என்று குறிக்கப்பெறுவதால் ஓவியர் குடியைச் சார்ந்தவன் என்று தெரிகிறது. இவன் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம் என்பது பொதுக்கருத்து.[32]

வறுமை மிகுந்த பாணனின் வீட்டு அடுக்களையில் நாய் குட்டி ஈன்று கிடக்கும். புலவரின் வறுமை காரணமாக உணவின்றி வாடும்

Scanned with CamScanner

நாயிடம் அதன் குட்டி பால் குடிக்க முனையும். அப்போது பாலின்றிக் கிடக்கும் புனிற்றுநாய் வலி தாங்காமல் குரைக்கும் என்பதை,

"திறவாக் கண்ண சாய் செவிக்குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்"

என்று பாடியுள்ளார்.[33]

Scanned with CamScanner